DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 100/2018
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW1 |
| Name | : சுப்புராஜ் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.11.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 24.04.1937ம் தேதிய கோவில்பட்டி டிஸ்ட்ரிக்ட் முன்சீர் கோர்ட் E.P No.688/1936 in O.S No.45/1932 மனுவில் சாத்துாரப்ப நாயக்கருக்கு வழுங்கப்பட்டுள்ள ஏல ஊர்ஜித சான்றிதழ் சான்று நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். 07.06.1946ம் தேதி பிராது தபசில் அடங்கிய சர்வே எண்.448/1ல் அடங்கிய 2 ஏக்கர் 68 செண்ட் நிலத்தில் நடுமையம் 1 ஏக்கர் நிலத்தினை சாத்துாரப்ப நாயக்கிரடமிருந்து 2ம் பிரதிவாதியின் தகப்பனார் அய்யலுசாமி நாயக்கர் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் ஆவண எண்.814/1946 சப்ரி நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 14.06.1946ம் தேதி சர்வே எண்.448/1ல் அடங்கிய 1 ஏக்கர் 34 செண்ட் நிலத்தினை பொறுத்து ஆவுடையம்மாள் வகையறா சாத்துாரப்ப நாயக்கருக்கு எழுதிக் கொடுத்துள்ள விடுதலைப்பத்திரம் ( ஆவண எண்.812/1946) சப்ரி நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகும். 07.06.1946ம் தேதி சர்வே

எண்.448/1ல் 2 ஏக்கர் 68 செண்டில் வடபக்கம் 34 செண்ட் நிலத்தினை சாத்துாரப்ப நாயக்கிரடமிருந்து ஆத்தியப்ப நாயக்கர் மகன் ராமசாமி கிரையம் பெற்ற பத்திரம் சப்ரி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். பாளையங்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு சார்பு நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும். (பிவா.சா.ஆ.5 ஆவணம் 1ம் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்ட போலி ஆவணம் என்று கூறி குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)

முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.